REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 10உ புதன் (23–3–55) ★ ★ வெளியூர்: பங்குனி 11உ வியாழன் (24—3—55) [இதழ் 240

66 உயிரை பலிகொண்ட விமான விபத்து

வாஷிங்டன், மார்ச் 22—

இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட விமான விபத்துக்களில் மிகப் பெரியதெனக் கருதப்படும் விமான விபத்து ஒன்று ஹாவாய் அருகே நிகழ்ந்துள்ளதாம்.

அமெரிக்க கடற்படைப் போக்குவரத்து விமானம் ஒன்று, விபத்துக்குள்ளாகியதால் 66 பேர் கொல்லப்பட்டனரென்று தெரிகிறது.

கைத்தறி விழாவில் கழகக் கருத்து

காய்ச்சல்விட்டால் அன்றே கை கால் பிடிப்பு விடும்?

நெசவாளர் துயர் துடைக்க அரசாங்கம் செய்ய வேண்டுவதென்ன?

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணா அறிவிப்பு

"விஞ்ஞானம் இன்று பெரும் அளவு வளர்ந்துள்ளது.

"மாட்டு வண்டியும், குதிரை வண்டியும் இருந்த இடத்தில், இன்று, மோட்டார், கார் இவை இடம் பெற்றிருக்கின்றன;

"உரலும், உலக்கையும், இருந்த இடத்தில், இப்போது, நெல் அரைக்கும் இயந்திரங்கள் இடம் பெற்றிருக்கின்றன;

"இப்படி, இன்று எத்தனையோ எண்ணற்ற விஞ்ஞானக் கருவிகள், நமது வாழ்வில் இடம் பெற்றுள்ளன.

"விஞ்ஞானத்தையும், முற்போக்கையும் வரவேற்கிற நாம்—மக்கள் மிகக்குறைவாக உழைத்து, நிரம்ப பலன்பெறவேண்டும் என்று பாடுபட்டு வருகிற நாம்—ஆலைகள் தோன்றிவிட்ட பிறகும், கைத்தறி இருக்க வேண்டும் என்கிறோம்; மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் முரண்பாடு போலத்தோன்றும்—ஆனல், முரண்பாடு அல்ல.

"குதிரை வண்டியும், மாட்டு வண்டியும் இன்று புதுப்பிக்கப்பட வேண்டும் என்று யாரும் கூற மாட்டார்கள்; உரலும், உலக்கையும் மீண்டும் உபயோகத்திற்கு வரவேண்டும் என்று, எவரும் கூறவில்லை; ஆனல், கைத்தறி மட்டும் மீண்டும் தொடர்ந்து இருக்க வேண்டும் என்கிறோம்.

"காரணம்?-மாட்டு வண்டியும், குதிரைவண்டியும் மோட்டார், கார் இவற்றுடன் போட்டி போட முடியாது; உரலும், உலக்கையும் இயந்திரங்களுடன் போட்டியிட முடியாது; மாறாக, கைத்தறி, ஆலைகளுடன் போட்டிபோட முடிகிறது. ஆலைகள் எந்த எந்த ரகங்களில் துணிகளை நெய்கின்றனவோ, அந்த அளவு, ஏறத்தாழ எல்லா ரகத் துணிகளையும் கைத்தறியில் நெய்ய முடிகிறது, என்று சங்கத் தலைவர் நாச்சிமுத்து அவர்கள் கூறினார்கள்.

"விஞ்ஞான வளர்ச்சியை எதிர்த்து வேறெதுவும் போட்டியிடமுடியாதிருக்கும்போது, கைத்தறி மட்டும் ஆலைகளை எதிர்த்து நின்று இன்றுவரை நிலைத்திருக்கின்றது; எதிர்காலத்திலும் நிலைத்திருக்கக் கூடியது.

"எனவேதான், மக்களின் உழைப்பைக் குறைத்து வசதிகளை அதிகரிக்க விஞ்ஞான வளர்ச்சி தேவை என்கிற நாம், கைத்தறி மட்டும் வாழ வேண்டும் என்று விரும்புகிறோம்."

—இவ்வாறு, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் கைத்தறி வார விழாவில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

மேலும் தொடர்ந்து அவர் பேசினார்:—

"கைத்தறியாளர் பிரச்சினையிலாயினும் எல்லாக் கட்சியினரும், கட்சிகளை மறந்து ஒன்றுபடுகிற ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தித்தந்த கைத்தறி நெசவாளர் சங்கத்தவரின் பெருந்தன்மைக்கு நன்றி செலுத்துகிறேன்.

"விழாக்கள், பொதுவாக மகிழ்ச்சியின் அடிப்படையில் அமையக் கூடும் இந்த விழாவில் கூடியிருக்கிற நாம் மகிழ்ச்சியோடிருக்கிறோம். ஆனல், இந்த விழா யாருக்காக நடைபெறுகிறதோ, அந்த நெசவாளர்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதாகக் கூற முடியாது

"அந்த கைத்தறித் தொழில் நிலை இன்று மகிழ்ச்சி தரத்தக்கதாயிருக்க முடியாது;

"இந்த விழாவில் நேற்று கலந்துகொண்ட முதன் மந்திரி காமராசர் அவர்கள், இன்று நாட்டில், கைத்தறித் துணிகள் ஒரு கோடி ரூபாய் பெறுமானவை விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கிறது என்று கூறியிருக்கிறார். சர்க்கார் தரும் புள்ளி விவரம் அது ஆனல், நாட்டில் இரண்டு அல்லது மூன்று கோடி ரூபாய் பெறுமானமுள்ள துணிகள் தேங்கிக் கிடக்கக் கூடும்.

"இதற்குக் காரணம் என்ன? கைத்தறித் துணிகள், ஆலைகளிலிருந்து வந்து குவியும் துணிகளுடன் போட்டியிட முடியாதது தானே? Co-Existance (கூட்டாக இருத்தல்) என்ற நிலை, அரசியலுக்கு-அதுவும் சர்வதேச அரசியலுக்கு, சாதகமானதாக இருக்கலாம். ஆனல், கைத்தறியும், ஆலையும் கூட்டாக வாழ்தல் என்பது சாத்தியமா என்ருல், இல்லையே.

"கைத்தறித் துணிகளை விற்பனை செய்யவேண்டும்; அவற்றை உற்பத்தி செய்பவனுக்கு மூன்று வேளை உணவு கிடைக்கவேண்டும்; கைத்தறித் துணிகளுக்கு ஏற்படும் கடும் போட்டிகளைச் சமாளிக்க வேண்டும்;—எத்தனை கணைகளைத் தான் நெசவாளர் தாங்குவது?

"நாட்டில் ஒரு பழமொழி சொல்லுவார்கள் — இரண்டு பெண்டாட்டிக்காரன் திண்டாட்டம்'—என்று! ஆனல், நமது காங்கிரஸ் அரசாங்கமோ, மூன்று மனைவிகளுக்கல்லவோ கணவனுயிருக்க வேண்டியிருக்கிறது!

"கதர்—மூத்த மனைவி!

"ஆலைகள்—தேசியப் போராட்டத்தின்போது தேவை எனத் தேடிப் பெறப்பட்ட அவற்றின் முதலாளிகள்—இரண்டாம் மனைவி!

'கைத்தறி—மூன்றும் மனைவி—அதுவும் கண்ணீரைப் பார்த்தபின்!

"இப்படி, கதர் உற்பத்தியும் வேண்டும்; ஆலை அரசர்களின் தயவும் வேண்டும்; கைத்தறியும் வாழவேண்டும்; என்று கருதுகிறது அரசாங்கம்.

"சாத்தியமாகுமா இது?

"அன்பர் ஆச்சாரியார், இதனல் தான்—அவர் ஆட்சி பீடத்திலிருந்தபோது—இந்த கைத்தறிப் பிரச்சினைக்காக, தெளிவான ஒரு தீர்மானத்தை சட்டசபையில் நிறைவேற்றினர்.

"அன்பர் ஆச்சாரியார் கூறுவனவற்றை எப்போதுமே சற்று சந்தேகத்துடன் நோக்கும் நானே, இந்தப் பிரச்சினையில் அவர் கருத்தை முழுமனதுடன் ஆதரித்தேன். சேலை வேஷ்டிகளின் உற்பத்தியை கைத்தறிகளுக்கே ஒதுக்க வேண்டும் என்ற அந்த தீர்மானத்திற்கு இதுவரை எப்போதும் கிடைக்காதவகையில் எல்லாக் கட்சிகளின் ஒருமுகமான ஒப்புதலைப் பெற்று நிறைவேற்றி டில்லிக்கு அனுப்பி வைத்தார். ஆனல் டில்லியில் மத்திய அரசாங்க தொழில் மந்திரியாயிருக்கும் டி. டி. கிருஷ்ணமாச்சாரி 'கைத்

(4-ம் பக்கம் பார்க்க)

★

சென்னை மாகில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின் சார்பில், அகில இந்திய கைத்தறி வார விழாவினையொட்டி, நேற்று மாலை 6 மணியளவில் எழும்பூர் பார்த்தியன் சாலையில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது

சங்கத் தலைவர் திரு. நாச்சிமுத்து அவர்கள் எல்லோரையும் வரவேற்றுப் பேசினர்.

திரு. பி. டி இராசன் தலைமை தாங்கினர். அவர் பேசுகையில், "ஆலைத்துணிகளின் தோற்றத்திற்கு முன்பே, கைத்தறித் துணிகள் இந்த நாட்டு மக்களின் உபயோகத்திலிருந்தவை. அவை, நமது மக்களின் ஆதரவுக்கு உரியவை. நாம் எல்லாரும் கைத்தறி ஆடைகளையே அணிவது என்ற நிலைவேண்டும்," என்று கூறினர்.

அடுத்து, தி மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களின் ஆரவாரப் பேரொலிக்கிடையே எழுந்து, சீரியதோர் கருத்துரை வழங்கினர்

பின், சங்கத் துணைத் தலைவர் திரு. அருணாசலம் அவர்கள், நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

திருக்குறள் மாநாடு

★

தமிழரின் தனிப்பெரு அறநூலாம் திருக்குறளின் மாண்பினை அறியவும், தமிழ்ப் பெருமக்களுக்குரிய குறள் நெறியின் சிறப்பினை உணரவும், ஏப்ரல் 24 ஞாயிறன்று சத்திபுரத்தை அடுத்த வாலஜாபாத் நகரில், திருக்குறள் மாநாடு நடைபெற ஏற்பாடாகி வருகிறது.

வாலாஜாபாத். தோழர் W. K. தேவராசன் அவர்கள் அதற்கான காரியங்களைக் கவனிக்க இசைந்துள்ளார்.

சிறந்த சொற்பொழிவுகள், இன்னிசை, நாடகம் நடைபெற இருக்கின்றன.

திருக்குறள் மாநாடு நடத்தும் பொறுப்பை வாலாஜாபாத் தி. மு. கழகக் கிளை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

காஞ்சியில் கலை விழா

மூன்றும் படிவம்வரை ஏழை மாணவர்களுக்கு இலவசக் கல்வி வழங்க சென்னை அரசாங்கம் முன்வந்திருக்கிறது. ஏழை மாணவர்கள் பெற வேண்டிய கல்வி, அந்த அளவுடன் நின்று விடுவதல்ல. அதற்கு மேலும் ஆறும் படிவம்வரை ஏழை மாணவர்கள் கல்வி பெற்ருக வேண்டும். அப்பொழுதுதான் கல்வியின் முதற்கட்டம் நிறைவேறினதாகக்கொள்ள முடியும்.

இரண்டாவது மூன்று படிவங்களிலும் கற்று, முதற் கட்டக் கல்வியை பூர்த்தி செய்ய ஏழை மாணவர்களுக்குப் பொருள் வசதி வேண்டும். ஏழை மாணவர்கள், தங்கள் சொந்த முயற்சியால், அதற்கான பொருள் வசதியைத் தேடிக் கொள்வது இலகுவல்ல. எனவே கூட்டு முயற்சி தேவைப் படுகிறது.

அக்கூட்டு முயற்சியின் சிறு கூறுதான் காஞ்சி கலைவிழா.

கலைவிழாவை, செங்கற்பட்டு மாவட்ட அரசாங்கத் தலைமை ஆணையாளர் தோழர் லேபோ பிரபு அவர்கள் துவக்குகிறார்கள்.

கலைவிழாவின் ஒவ்வொரு நாள் நிகழ்ச்சிக்கும், சட்டசபை உறுப்பினர்களான தோழர்கள் எம். சுயம்பிரகாசம், எம். தெய்வசிகாமணி, ஏ. கோவிந்தசாமி, டி. ஷண்முகம் முதலியவர்களும், தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், அண்ணா ஆகியவர்களும் தலைமை ஏற்கிருர்கள்.

கலைவிழாவைச் சிறப்பித்து, கல்விபெறும் விருப்புடைய மாணவர்களின் நோக்கம் வெற்றி பெற, பெரும் நிதி திரட்டித் தரும் ஒரே குறிக்கோளுடன், தமிழ் நாடகத் துறையில் புகழ் பரப்பி விளங்கும்,

எம். ஜி. ராமச்சந்திரன், எம். ஜி. சக்ரபாணி, ஜி. சகுந்தலா, என். எஸ். நாராயணப்பிள்ளை குழுவினரும்,

என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம் குழுவினரும்,

எஸ். எஸ். இராஜேந்திரன், எம். என். கிருஷ்ணன், டி. வி. நாராயணசாமி, சி. ஆர். இராஜகுமாரி, இலட்சுமிகாந்தம் குழுவினரும்,

மனேகர், வித்தியாவதி, பீர் முகம்மத் குழுவினரும்,

பேர்ஸ் தியாகராயர் கல்லூரிக் கலைக் குழுவினரும் உயர்ந்த நாடக விருந்து அளிக்கின்றனர்.

கலை விழாவில் கருத்து வளமும், அதே காலத்தில் ஏழை மாணவர்களின் கல்விக்கண்ணைத் திறக்கும் மனத்திருப்தியும் பங்கு கொள்ளுவோருக்கு ஏற்படுவது நிச்சயமாகும். எனவே, கலைவிழா வெற்றி பெறவும், ஏழை மாணவர்கள் கல்வி உயரவும் கலைவிழாவில் கலந்துகொள்ள, தமிழ்ப் பெருங்குடி மக்களை வேண்டிக்கொள்கிறோம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 23—3—'55 புதன்

ஏகாதிபத்திய ஆட்சியும்-எதேச்சாதிகார ஆட்சியும்!

ஏகாதிபத்திய ஆட்சி காலத்தில் பொதுவாக இந்தியத் துணைக்கண்டமும் குறிப்பாக திராவிடமும் தொழில் வளத்தில் நசுக்கப்பட்டு வந்துள்ளன. காலப்போக்கில் ஏகாதிபத்திய பொருளியல் போக்கின்படி, இத்துணைக்கண்டத்திலும் இங்கொன்றும் அங்கொன்றுமாக, தொழில் தலையெடுப்பதற்கு, வேண்டா வெறுப்பாக ஏகாதிபத்தியம் உரிமை தந்தது. காங்கிரசின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரச்சாரமும், மேற்குறித்துள்ள ஏகாதிபத்திய பொருளியல் போக்கைத் துரிதப்படுத்தியது.

வெள்ளை தொழில் முதலாளிகளும், குறைந்த செலவில் நிறைந்த இலாபம் பெரும் பேராவாவுடன், இந்தியத் துணைக் கண்டத்தில், தொழில்களைத் துவங்கினர். அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு வடநாட்டு மார்வாரிகளும், குஜராத்திகளும், பார்சிகளும் காங்கிரஸ் கட்சியின் பிரச்சார பலத்துடன் தொழில் துறையில் தலையிட்டனர்.

காங்கிரஸ் தலைமைப் பீடம் பெரிதும் விந்தியத்திற்கு வடக்கிலேயே உருவாகி வளர்ந்து வந்ததால், புதிதாகத் துவங்கப்பட்ட தொழில்களும் விந்தியத்திற்கு வடக்கிலேயே நின்றுவிட வேண்டியதாகிவிட்டன. அத்தொழில்கள் விந்தியந் தாண்டாததற்கு, வரலாற்றுத் தொடர்புடைய சில காரணங்களும் உண்டு. ஆரிய—திராவிட கலாச்சாரப் பாகுபாடும், அதனடியாகப் பிறந்து வளர்ந்து வந்துள்ள மனப்போக்கும், திராவிடத்தில் தொழிலைத் துவங்க விடாமல், வடநாட்டு முதலாளிகளைத் தடுத்து இருக்கிறது. வெள்ளை ஏகாதிபத்தியத்தின் ஆதரவை நம்பி, வெள்ளையர்களுக்குப் போட்டியாக, திராவிடத்தில் தொழிலை நிர்மாணிக்க வடவர்களுக்குத் துணிவு ஏற்படவில்லை. ஏகாதிபத்திய ஆட்சியில், வடநாட்டில் தொழில் வளர்ந்தோங்கியது போல் திராவிடத்தில் தேவையான அளவிற்குத் தொழில் உருவாகாமல் போனதற்கு, இதன் எதிரொலிதான் காரணம். நிற்க,

ஏகாதிபத்திய ஆட்சியில் வடநாடு தொழில் வளத்தில் முன்னேறவும், திராவிடம் பின்தங்கி விடவுமான நிலை ஏற்பட்டு விட்டது. அதன் விளைவு பயங்கரமாக வளர்ந்தோங்கி இருக்கிறது. விரைவிலும், சிறு முயற்சியிலும் தீர்க்க முடியாத பெரும் சிக்கலான பிரச்சினையாகக் காட்சி அளித்துக் கொண்டு இருக்கிறது.

காலாகாலத்தில் ஏற்பட வேண்டிய தொழில் துறையில் வலியத் திணிக்கப்பட்ட தேக்கம், திராவிடர்களை வேலை தேடி பிறநாட்டிற்குக் கூலிகளாகத் துரத்தி இருக்கிறது. எஞ்சிய இங்குள்ளவர்களும் பெரிய அளவில் விவசாயத்தையும் சிறிய அளவில் கைநெசவுத் தொழிலையும் சிறந்த பிழைப்பு மார்க்கங்களாக நம்பி வாழ வைத்திருக்கிறது.

எனவே, தொழில் வளமின்மையின் உள்ளடக்கமான பஞ்சம், பட்டினி, தொத்து நோய், வேலையின்மை, அரைகுறை வேலை, மிருக வாழ்வு போன்ற, மனிதனால் தவிர்க்கக் கூடிய கொடுமைகளுக்கு, திராவிடர் பலியாகித் தவித்துக் கொண்டு இருக்கின்றனர். இங்குள்ள விவசாயத் துறைக்குத் தேவைப்படும் அளவைக் காட்டிலும் பல மடங்குக் கூடுதலானவர் விவசாயத்தை மொய்த்துக் கொண்டு இருப்பதால், அவர் பெறும் ஊதியம் தங்கள் தங்கள் உடலுடன் உயிரை ஒட்ட வைத்திருப்பதற்குக்கூட உதவுவதாக இல்லை. விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ளவர் பெறும் ஊதியம் அவர்கள் உயிர்காப்புக்கே துணைபுரியாத நிலையில் இருக்கும்பொழுது, அவர்களை நம்பி புதிய தொழில்கள் தோன்றுவதெங்கே? தோன்றி, தொழில்கள்வளர்ச்சி குன்றாது வாழ்வதெங்கே?

திராவிடருக்கு — தென்னாட்டவருக்கு வெள்ளை ஏகாதிபத்தியம் தந்த பரிசு இது. ஏகாதிபத்திய மறைவுடன் இந்தப் பரிசும் தொலைந்திருக்க வேண்டும்; தொலைத்துக் கட்ட காங்கிரஸ் ஆட்சியாளர்கள் முன்வந்திருக்க வேண்டும்.

இத்துறையில், இந்தியப் பேரரசு முயலத்தான் முயலுகிறது. அப்பெரு முயற்சியின் முழுத் தோற்றந்தான் முதல் ஐந்தாண்டுத் திட்டம். ஆனால் அத்திட்டத்தில் திராவிடம் அறவே அலட்சியப்படுத்தப்பட்டு விட்டிருக்கிறது. இந்தியப் பேரரசின் இவ்வோரவஞ்சனையை மெய்ப்பிக்க, ஐந்தாண்டுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நீர்த்தேக்கம்—மின்சார உற்பத்தி—விவசாய முன்னேற்றம்—தொழில் ஏற்பாடு போன்றவற்றிற்காக வரையறுக்கப்பட்டுள்ள திட்டங்களும், அவைகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள கோடிக்கணக்கான ரூபாய்களும், அதில் இதுவரை செலவழிக்கப்பட்டுள்ள பெருந்தொகையும் போதிய சாட்சியங்களாகும். அதே நேரத்தில், அதே திட்டத்தில் திராவிடம் அடைய இருக்கும் வசதிகளையும், அவைகளுக்கு ஒதுக்கியுள்ள செலவுத் தொகையையும் காணும் எவரும், கருத்துக் குருடராக இருந்தபோதிலும் — கண்ணீர் சொரிவர். 'திராவிடமே! உன் நிலை இதுதானா?' என்ற கேள்விக் குறியாக மாறிவிடும் அவர்கள் முகத்தோற்றம்!

அவ்வினாக் குறியின் போர் முரசுதான், தமிழ்நாடு எங்கணும் சென்ற ஞாயிற்றுக் கிழமை முழங்கி இருக்கிறது.

ஆங்கில ஏகாதிபத்திய ஆட்சியும், இந்தியப் பேரரசின் எதேச்சாதிகார ஆட்சியும், திராவிடர்களைப் பொறுத்த வரையில் ஒன்றேதான் என்பதை, தெள்ளத் தெளிவாக, நமது கழகக் காளையர்களின் புள்ளி விவரப் பேச்சிலிருந்து, திராவிடப் பெருங்குடி மக்கள் விளங்கிக் கொண்டிருப்பர்.

சனாதனத்தின் கொடுமைகள் புரிகிறதா?

பூரியிலுள்ள ஜெகந்நாதர் கோயிலில் ஒரு கிறித்துவப் பெண்மணி அனுமதிக்கப்படாததால், ஜெகந்நாதரை தரிசித்துவரச் சென்ற ஆச்சாரியா விநோபா பாவே, அக்கோயிலைவிட்டு வெளியேறிவிட்டாராம்!

பிரெஞ்சு நாட்டிலிருந்து வந்த மேடம் பிரான்ஸ் நிகோல் என்னும் கிறித்துவ மங்கை உட்பட ஒரு குழுவினருடன் ஆச்சாரியா விநோபா, பூரி ஜெகந்நாதர் கோயிலில் வரவேற்பளிக்கபபட்டார்.

ஆனால், அவரது குழுவில் ஒரு கிறித்துவப் பெண்மணியும் உள்ளார் என்று கூறப்பட்டதும், அர்ச்சகர்கள், 'அந்த மாது ஒரு மிலேச்சராகையால் அவரை கோயிலில் அனுமதிக்க முடியாது' என்று கூறி மறுத்தனராம்!

"என் சகோதரியை உள்ளேவிட மறுத்ததால் நான் திரும்பிச் சென்றுவிடுகிறேன்; என்சகோதரியைப் பார்க்க விரும்பாத அப்படிப்பட்ட ஆண்டவனின் தரிசனம் எனக்குத் தேவையில்லை," என்று சொல்லிக்கொண்டே, கூப்பிய கைகளுடன் ஆச்சாரியா விநோபா தமது குழுவினருடன் அந்த அர்ச்சகர்களிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுவிட்டாராம்!

கடலரிப்பைத் தடுக்க முயற்சி

மத்திய சர்க்கார் புதியமுறையைக் கையாளுகின்றனர்!

தனுஷ்கோடியில் நடைபெறும் கடலரிப்பைத் தடுக்க, மரத்தினால் செய்யப்பட்ட 3 தடுப்புகள் அமைக்க மத்திய சர்க்கார் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்போவதாக டெல்லி மேல் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

தனுஷ்கோடி கப்பல் துறையை பொருத்தமான வேறோர் இடத்துக்கு மாற்றும் பிரச்சினையும் நிபுணர் குழு ஒன்றின் பரிசீலனையிலிருந்து வருகிறதாம்.

கிழக்கு பாகிஸ்தான் — மே. வ. இரயில் இணைப்பு

கிழக்கு பாகிஸ்தானையும், மேற்கு வங்கத்தையும் இணைக்கும் புதிய இரயில் பாதை ஒன்றை அமைப்பது பற்றி இருநாட்டு சர்க்கார்களும் தீவிரமாகப் பரிசீலனை செய்து வருவதாக பாகிஸ்தான் அமைச்சர் டாக்டர் கான்சாகிப் தெரிவித்திருக்கிறார்.

இந்த இணைப்பு சம்மந்தமாக இரு சர்க்கார்களும் தங்களிடையே, விரைவில் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளுமென்றும், இரு நாட்டு இரயில்வே இலாகாக்களும் இது விஷயத்தில் ஒத்துழைப்புத் தருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆசிய நாடுகளுக்கு அமெரிக்க உதவி!

வருகிற ஜூலை திங்கள் முதல் தேதியன்று ஆரம்பமாகவிருக்கும் புது நிதி ஆண்டில், ஆசிய நாடுகளுக்கு இராணுவ, பொருளாதார உதவிகள் அளிக்க அமெரிக்கா, 224 கோடி 5 லட்சம் டாலர் செலவிடும் என்று அறியக்கிடக்கிறது.

அடுத்த 8 ஆண்டுகளில், கம்யூனிஸ்டல்லாத ஆசிய நாடுகளின் பொருளாதார நிலையை 30 சதவிகிதம் உயர்த்துவதற்குப் பூர்வாங்க நடவடிக்கையாக இத்திட்டம் இருக்குமாம்.

வடநாட்டு அகதிகளுக்கு புனர்வாழ்வு!

மத்திய அரசாங்கம் செலவிட்ட தொகை!

சர்க்கார் அறிக்கை தரும் புள்ளி விபரங்கள்

'இந்தியாவில் உள்ள இடம் பெயர்ந்தோர் தொகை மொத்தம் 81,03,000,"

என்று, மத்திய அரசாங்க அகதிகள் புனரமைப்பு இலாகாவின் அறிக்கை ஒன்று கூறுகிறது.

மேற்கு பாகிஸ்தானிலிருந்து 47,00,000 பேரும், கிழக்கு பாகிஸ்தானிலிருந்து 34,00,000 பேரும் அகதிகளாக வந்தனராம்!

1954—55ம் ஆண்டு முடிவுக்குள், இந்த அகதிகளுக்காக மத்திய அரசாங்கம் ரூ. 223,68,00,000 செலவிட்டுள்ளதாம்!

1955—56-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில், அகதிகளுக்கு வாழ்வு தருவதற்காக, மேலும் ரூ.-65,32,00,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

மத்திய அரசாங்க உதவியுடன்...!

ம. பி.-யில் இரண்டாவது மருத்துவக் கல்லூரி

மத்திய பிரதேச மாநிலத்தில் வரும் ஜூலையில் இரண்டாவதாக ஒரு மருத்துவக் கல்லூரி துவக்கப்படவிருக்கிறது.

இப்போது நாகபுரியில் ஒரு கல்லூரி உள்ளது; மருத்துவர்கள் ஏராளமாகத் தேவைப்படுவதைக் கருத்தில் கொண்டு, சமீபத்தில் நடைபெற்ற மந்திரிசபைக் கூட்டத்தின்போது, ஜபல்பூரில் இன்னுமொரு மருத்துவக் கல்லூரியை மத்திய அரசாங்க உதவியுடன் நிறுவுவது என்று முடிவாகியுள்ளதாம்.

தென்னிந்தியாவில் தொழில் வளர்ச்சி

மந்திரி பக்தவத்சலம் திறக்கும் 'புதுந் தொழில்!'

திருநெல்வேலி, மார்ச் 19—

பனைமரக் குடிசைத்தொழில் அபிவிருத்திக்கான திட்டமொன்றை திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூர் வட்டத்தில் உள்ள போதாகலவிளை எனும் கிராமத்தில் கைத்தொழில் மந்திரி பக்தவத்சலம் துவக்கி வைத்திருக்கிறார்.

பனை நார் உரிக்கும் திட்டத்தைத்தான் மந்திரியார் துவக்கியது. இந்தப் பனை நார், 'பிரஷ்'கள் முதலியன தயாரிப்பதற்கு உதவுகின்றன. அவற்றை கிராம மக்களே சுத்தம் செய்து பாடம் பண்ணி பொருளாதார உதவியும் மற்றும் பிற உதவிகளையும் செய்து தரவே திட்டமாம்!

திரு-கொச்சி வரவு-செலவுத் திட்டம்

ரூ. 4 கோடிக்குமேல் பற்றாக்குறை

திரு-கொச்சி மாநிலத்திற்கான 1955-56-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தை, நிதிப் பொறுப்பையும் ஏற்றிருக்கிற பனம்பள்ளி கோவிந்த மேனன் சட்ட சபையில் இன்று பிரரேபித்தார்

திட்டத்தில் ரூ. 4,37,76,000 துண்டு விழுவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

திட்டப்படி வருவானம் ரூ 17,18,36,000 என்றும், செலவு ரூ 21,56,12,000 என்றும் கூறப்படுகிறது.

திட்டத்தில் புதுவரி விதிப்புகள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆந்திராவில் கதர் அபிவிருத்தி இலாகா மூடுவிழா!

ஆந்திர சர்க்கார், மாநிலத்தின் கதர் அபிவிருத்தி இலாகாவை ஏப்ரல் 1-ந் தேதி முதல் மூடிவிடுமாறு உத்தரவிட்டுள்ளனர் என்று தெரிகிறது.

இதுவரை இந்த மாநில கதர் அபிவிருத்தி இலாகா செய்துவந்த வேலைகளை இனி அகில இந்திய கதர், கிராமத் தொழில் அபிவிருத்தி போர்டு மேற்கொள்ளுவதென்றும், ஆந்திர கதர் அபிவிருத்தி இலாகாவை மூடிவிடுவது என்றும் கூறப்பட்ட யோசனையை அகில இந்திய கதர், கிராமத் தொழில் அபிவிருத்தி போர்டு ஏற்றுக்கொண்டதாகத் தெரிகிறது.

இந்த இலாகா, 1946-ம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது; 100 பேர் வரையில் வேலை செய்கிற நான்கு உற்பத்தி நிலையங்களையுடைய இந்த இலாகாவிடம் இப்போது கையிருப்பாக ரூ. 4-லட்சம் பெறுமான கதர் துணிகளும், ரூ 2 லட்சம் பெறுமான நூலும் இருப்பதாகத் தெரியவருகிறது.

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை தகராறு

பெடரல் நீதி மன்றத் தீர்ப்பு

லாகூர், மார்ச் 21—

பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபையை கடந்த 24-ந் தேதியன்று பாக். கவர்னர்—ஜெனரல் கலைத்தது தவறு என்று மௌல்வி தமிஜுதின்கான் தொடுத்த வழக்கில் சிந்து பிரதம நீதி மன்றம் அவருக்குச் சாதகமாகத் தந்த தீர்ப்பை எதிர்த்து பாகிஸ்தான் அரசாங்கம் பெடரல் நீதி மன்றத்தில் செய்து கொண்ட அப்பீலில் பாகிஸ்தான் சர்க்காருக்கு வெற்றி கிடைத்திருக்கிறது.

பிரதம நீதிபதி முகம்மது முனீர், நீதிபதிகள் அக்ரம் ஷரீப், ரஹ்மான் ஆகியோர், அரசியல் நிர்ணய சபையைக் கலைத்தது தவறு என்று சிந்து நீதி மன்றம் தந்த தீர்ப்பிற்கு எதிராக பாகிஸ்தான் அரசாங்கம் செய்த அப்பீலை ஏற்றுக்கொண்டனர்; ஆனால் மற்றொரு நீதிபதியான, கார்னெலிபஸ், இதை ஏற்றுக் கொள்ளவில்லை என்று தெரிகிறது.

"சிந்து நீதி மன்றம், இந்தப் பிரச்சினையில் முடிவு கூறும் தகுதி பெற்றதல்ல," என்று பெடரல் நீதி மன்றம் தீர்ப்பளித்திருக்கிறது.

என்றாலும், அரசியல் நிர்ணய சபையைக் கலைத்தது சரியா இல்லையா என்ற பிரதான பிரச்சினைக்கு, இன்னும் அந்த பெடரல் நீதி மன்றம் தீர்ப்புத் தரவில்லை என்றும் தெரிகிறது.

நெய்வேலியில் புதுக் கட்டிடங்கள்

ரூ. 7,87,000 செலவாகும்

தென்னாற்காடு மாவட்டத்திலிருக்கும் நெய்வேலி சுரங்க திட்ட இடத்தில் காரியாலயங்கள், ஆராய்ச்சிக் கூடங்கள், சிப்பந்திகளுக்கான குடியிருப்பு வசதிகள் முதலியவைகள் கட்ட நடப்பு நிதி ஆண்டில் ரூ 7,87,000 செலவாகுமென எதிர்பார்க்கப்படுகிறதாகத் தெரிகிறது.

மாநாடு கூடுமாம்!

பாகிஸ்தான் அரசியலமைப்பை வகுக்க மாநாடொன்று கூட்டப்போவதாக பாகிஸ்தான் பிரதமர் தெரிவித்திருக்கிறார்.

வேலையில்லாமைக்கு ஐந்தாண்டுத் திட்டங்கள் பரிகாரமாகுமா?

நிதி அமைச்சர் தேஷ்முக் பேச்சு

"வேலை வசதியை அதிகரிப்பதற்கே இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் முதலிடம் தரப்படுகிறது; ஆனால் இந்தியா போன்ற ஒரு பின்தங்கிக் கிடக்கிற நாட்டில், முன்னேற்ற மடைந்துள்ள மற்ற ஒரு நாட்டைப்போல் குறுகிய ஒரு கால அளவிற்குள்ளாக வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்து விடுவது சாத்தியமில்லை; முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாகப் புதிதாக 40 லட்சம் பேருக்கு வேலை கிடைத்திருக்குமென்று நான் கருதுகிறேன்."

இவ்வாறு, மத்திய சர்க்கார் நிதி அமைச்சர் தேஷ்முக், டெல்லி மக்கள் சபையில், 1955—56-ம் ஆண்டிற்கான வரவு - செலவுக் கணக்கில் புதிதாக விதிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த வரிகள் சம்பந்தமாகச் சில சலுகைகள் பற்றிக் குறிப்பிடுகையில், வேலையில்லாத் திண்டாட்டம் பற்றியும், விலைவாசிகள் சரிவு பற்றியும், தமது கருத்தைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறியதாவது :—

"விவசாயப் பொருட்களின் விலைச் சரிவு முக்கியமான பிரச்சினையே ஆகும்; சர்க்கார் இதை மிக உன்னிப்பாகக் கவனித்தே வருகிறது."

"நடுத்தர, மற்றும் மோட்டா ரகத் துணிகளுக்கு,சதுர கெஜத்திற்கு ஒரு அணுவாக விதிக்கப்பட்டிருந்த 'எக்சைஸ்' வரி, அரையணுவாகக் குறைக்கப்படும்; கைத்தறித் தொழிலுக்கு உதவும் வகையில், இந்த ரகங்கள் மீது கெஜத்துக்குக் காலணு வீதம் ஏற்கனவே விதிக்கப்படும் 'செஸ்' வரி போக இந்த 'எக்சைஸ்' வரி உபரியாகவே விதிக்கப்படும்.

"நடுத்தர, ஏழை வர்க்கத்தினரும், விவசாயிகளுமே பெரும்பாலும் மோட்டா ரகத் துணிகளை வாங்குவதால் அவற்றிற்கு வரிச் சலுகை தரப்படுகிறது.

"தைக்கும் இயந்திரங்கள், அவ்வியந்திரங்களின் பாகங்கள் ஆகியவற்றிற்கு விதிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த 10 சதவிகித 'எக்சைஸ்' வரியும் கைவிடப்பட்டுவிட்டது.

"'சோஷலிச மாதிரி'யில் சமுதாயத்தை உருவாக்கும் குறிக்கோளை நோக்கி நாம் மிக முக்கியமான முதலடி எடுத்துவைப்பதை இந்த பட்ஜெட் தெரிவிக்கிறது."

'இந்திய இலக்கியங்கள்' பாரசீக மொழியில் வெளிவரும்?

'பகவத் கீதை', 'சகுந்தலா' உபநிஷத் ஆகியவை முதலிடம் பெறுமாம்!

கலாச்சார உறவுகளுக்காக உள்ள இந்திய 'கவுன்சில்', இந்திய இலக்கியங்களில் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து பாரசீக மொழியில் மொழி பெயர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக நிபுணர்கள் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளது.

டாக்டர் ஏ. ஏ. ரெக்மத் என்ற ஈரானியத் தூதுவர் அந்தக் குழுவின் ஆதரவாளராயிருக்கச் சம்மதித்திருப்பதாகத் தெரிகிறது.

'சகுந்தலா', 'பகவத் கீதை' உபநிஷத்துக்கள் ஆகியவற்றை முதன் முதலில் மொழி பெயர்த்து வெளியிடுவதென்று, அந்தக் குழுவின் முதற்கூட்டத்தில் முடிவாகியிருக்கிறதாம். இதற்கான வேலைகள் 1955 ஜூலையில் முடிந்துவிடும் என்று தெரிகிறது.

சிந்து சட்டசபைத் தலைவர் வெளியேற்றப்பட்டார்!

ஐதராபாத் (சிந்து), மார்ச் 21—

மீர்குலாம் அலி தால்பூர் என்ற சிந்து மாநில சட்டசபை தலைவர், ரெவினியூ மந்திரி பீர் அலி முகம்மது கொண்டு வந்த தீர்மானம் ஒன்றின்படி, பதவியிலிருந்து நீக்கப்பட்டார் என்று தெரிகிறது.

சபையின் ஒருமனதான வாக்கு தீர்மானத்திற்குச் சாதகமாகக் கிடைத்தது.

நேற்று முன்தினம்தான், தால்பூர் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

சிந்து முதன் மந்திரி எம். ஏ. குர்ரோ பேசுகையில், தால்பூரைக் கைது செய்யுமாறு சர்க்கார் உத்திரவிடவில்லை என்றும், போலீசாரின் புலன் விசாரணைகளின் எதிரொலியாகவே அவர் கைது செய்யப்பட்டார் என்றும் கூறியிருக்கிறார்.

துணியை வெண்மையாக்கும் தொழிற்சாலை

சென்னையில் இடம் பெறும்?

துணிகளை வெண்மையாக்கி, அவற்றைப் பளபளப்பாகவும், வழுவழுப்பாகவும் ஆக்குவதற்கான தொழிற்சாலை ஒன்றை சென்னையில் நிறுவுவதற்காக மத்திய சர்க்கார், சென்னைக்கு ரூ. 47,981—8—0 மானியத் தொகையாகத் தந்துள்ளனராம்.

கைத்தறித் தொழிலின் அபிவிருத்திக்கென பீகார் மாநிலத்திற்குக் கடனாக ரூ. 2,00,000, மானியமாக ரூ. 17,160, மேற்கு வங்கத்துக்குக் கடனாக ரூ. 68,750 அளிக்கப்பட்டுள்ளதெனத் தெரிகிறது. அது போலவே, செயற்கைப் பட்டுக் கைத்தறித் தொழிலின் அபிவிருத்திக்கென உத்திர பிரதேசத்திற்கு இந்திய சர்க்காரால் ரூ. 10,000 மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளதெனவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், காதி விற்பனை நிலையங்களுக்கு, காதி உற்பத்தி அல்லது விற்பனைகளின் மீது நிதி உதவி அளிப்பதற்காக அகில இந்திய காதி கிராமத் தொழில்கள் குழுவிற்கு மேற்கொண்டு ரூ 7,00,000 மானியத் தொகை தரப்பட்டிருக்கிறது. இது தவிர, பட்டு உற்பத்தித் தொழிலின் அபிவிருத்திக்காகப் பல்வேறு மாநிலங்களுக்கு நிதி உதவியாக விநியோகிக்கப்படுவதற்கென மத்திய பட்டுத்தொழில் குழுவிற்கு மானியத் தொகையாக ரூ. 1,42,050 வழங்கப்பட்டிருக்கிறதாம்.

* *

தி.மு.க. கிளைகள் தேர்தல் நடத்தும் முறை

27—3—55 ஞாயிறன்று தேர்தல் நடத்தும் சிற்றூர்—பேரூர்—நகர—சென்னை வட்டக் கிளைகள் கீழ்க்கண்ட முறையில் தேர்தல் நடத்த வேண்டும் :—

1. சிற்றூர் — பேரூர் — நகரம் —சென்னை வட்டம் ஆகிய பகுதிகளின் தி. மு. கழகத்தைச் சார்ந்த சாதாரண உறுப்பினர்கள், அந்தந்தப் பகுதியில், அந்தந்தக் கிளைகளின் செயலாளர் குறிப்பிடும் இடத்தில், குறிப்பிட்ட நேரத்தில் ஒன்றுகூட வேண்டும்.
2. சென்னையைப் பொறுத்த வரையில், மாவட்டச் செயலாளர் நியமிக்கும் ஆணையாளர்கள், குறிப்பிட்ட இடங்களில், குறிப்பிட்ட நேரங்களில், குறிப்பிட்ட வட்டக் கிளைகளின் தேர்தலை நடத்தி வைப்பார்கள்; இறுதி வரையில் அவர்களே தேர்தல் ஆணையாளராக இருந்து நடத்தி வைப்பார்கள்.
3. பிற மாவட்டங்களில் தலைமைக் கழகத்தாலோ அல்லது அந்தந்த மாவட்டக் கழகத்தாலோ நியமிக்கப்பட்ட தேர்தல் ஆணையாளரின் கீழ், கிளைகளின் தேர்தல் நடைபெற வேண்டி இருந்தால், அந்த ஆணையாளர்களே இறுதி வரையில் தேர்தலை நடத்தி வைப்பார்கள்.
4. தலைமைக் கழகத்தாலோ அல்லது மாவட்டக் கழகத்தாலோ ஆணையாளர் நியமிக்கப்படாத பிற சிற்றூர்—பேரூர்—நகரக் கிளைகளின் தேர்தலை அந்தந்தக் கிளைகளின் நடமுறைச் செயலாளரே துவக்கி வைப்பார். நடைமுறைச் செயலாளர் போட்டி போடுபவராக இருந்தால், கூட்டத்தில் பெரும்பான்மையோரின் விருப்பத்தைப் பெற்ற ஒருவர் தேர்தலைத் துவக்க வேண்டும்.
5. முதலில் செயலாளர் தேர்தல் நடைபெற வேண்டும்; செயலாளர் தேர்தலில் எல்லா உறுப்பினர்களும் கலந்து கொள்ள வேண்டும்.
6. செயலாளர் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர் கூட்டத்திற்குத் தலைமை வகித்துத் தொடர்ந்து தேர்தலை நடத்த வேண்டும்.

[துணைச் செயலாளர்—பொருளாளர் — செயற் குழு உறுப்பினர்—மாவட்டப் பிரதிநிதி ஆகிய பதவிகளில் எதிலும் நிற்காத ஒருவர் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கக் கிடைப்பது பெரும்பாலும் அரிதாக இருக்குமாதலால், தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர் தொடர்ந்து நடைபெற வேண்டிய தேர்தலை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிறது.]

7. பின், துணைச் செயலாளர் தேர்தல் நடைபெற வேண்டும்; எல்லா உறுப்பினர்களும் கலந்துகொள்ள வேண்டும்.
8. பின், பொருளாளர் தேர்தல் —எல்லா உறுப்பினர்களும் கலந்துகொள்ள வேண்டும்.
9. பின், செயற் குழு உறுப்பினர்கள் தேர்தல்—குறைந்த அளவு 8 உறுப்பினர்களிலிருந்து அதிக அளவு 18 உறுப்பினர்கள் வரையில் (செயலாளர்—துணைச் செயலாளர் — பொருளாளர் தவிர்த்து) தேவையான அளவு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
10. எந்தப் பதவிக்கு யாரை நிறுத்துவதாக இருந்தாலும், உறுப்பினர் ஒருவர் முன்மொழிய மற்றொருவர் வழிமொழிய வேண்டும். செயலாளர் — பொருளாளர் — துணைச் செயலாளர் தேர்தலில், தனித்தனியே, ஒரு உறுப்பினர் ஒருவரைத்தான் முன் மொழியவோ, வழி மொழியவோ செய்ய வேண்டும்.
11. செயற் குழு உறுப்பினர்கள் எவ்வளவு பேர்கள் தேவைப்படுகின்றனரோ, அவ்வளவு பேர்களின் பெயர்கள், ஒவ்வொன்றாக ஒரு உறுப்பினரால் முன்மொழியப்பட்டு மற்றொரு உறுப்பினரால் வழிமொழியப்பட வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும், தேர்தெடுக்கப்படவேண்டிய செயற் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வளவோ, அதே அளவு தடவைதான், முன் மொழியவோ, வழிமொழியவோ (இரண்டும் சேர்த்த அளவு) செய்யலாம்; ஆனால், தனித்தனியாகச் செய்ய வேண்டும்.
12. தேர்தலில் போட்டி இருந்தால், போட்டியிடுபவர்களின் பெயர்கள் கரும்பலகை ஒன்றில் எல்லோருக்கும் தெரியும்படி அகரவரிசையில் எழுதப்பட வேண்டும்; தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று குறிக்கப்பட வேண்டும்.
13. கிளைக் கழகத்தின் முத்திரையோ அல்லது கூட்டத் தலைவர் குறிப்பிடும் முத்திரையோ இடப்பட்ட வெள்ளைத்தாள்கள், வாக்குரிமைச் சீட்டாகப் பயன்படுத்தப்படும்.
14. உறுப்பினர்கள், தாம் தேர்ந்தெடுக்க விரும்புபவர் அல்லது விரும்புபவர்களின் பெயரை அல்லது பெயர்களை அந்தத் தாளில் தெளிவாக எழுதி, வாக்குரிமைச் சீட்டைப் போடுவதற்கு என்று வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் போடவேண்டும்.
15. மிகவான எண்ணிக்கை பெற்றோரே தேர்ந்தெடுக்கப்பட்டவராவார். தலைவர், போட்டியிடாதவர்களில் தேவையான பேர்களை உடன் வைத்துக்கொண்டு வாக்குகளை எண்ணவேண்டும்.
16. எந்த ஒரு பதவிக்காவது, போட்டியிடும் இருவருக்குச் சமமான வாக்குகள் பதிவானால், சீட்டு குலுக்கிப் போட்டுத் தேர்ந்தெடுக்கவேண்டும்.
17. தேர்தல் பற்றிய தகராறு இருந்தால், தேர்தல் நடைபெற்ற ஒரு திங்களுக்குள் மாவட்டக் கழகத்தின் மூலம் தலைமைக் கழகத்துக்கு விண்ணப்பித்துக் கொண்டு நீதி கோரலாம்.
18. பிறவற்றிற்கு, "தி. மு. க. கிளைகள் தேர்தல் பற்றிய அறிக்கை"யைக் கண்டு கொள்க.

சி. என். அண்ணாதுரை
பொதுச் செயலாளர்
"அறிவகம்" சென்னை. 22—3—55

* *

தனது 'தவறு' குறித்து கபார்கான்!

லாகூர், மார்ச் 19—

"ஜனநாயகத்தில் நான் கொண்டுள்ள உறுதியான நம்பிக்கை தான் நான் செய்யும் குற்றம் என்று நினைக்கிறேன்,"

என்று செஞ்சட்டைப் படைத் தலைவர் கான் அப்துல் கபார்கான் ராவல்பிண்டியிலிருந்து வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

"என்னுடைய சொந்த மாநிலத்தில் நான் நுழைவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்க இன்னும் சர்க்கார் முன்வரவில்லை கடந்த ஜனவரியில் நான் சிறையிலிருந்து விடுதலைபெற்றபோது, எனது நடமாட்டத்திற்குத் தடை விதிக்கப்படுவதைக் காட்டிலும் சிறையிலேயே இருந்து விட விரும்புவதாக நான் சர்க்காருக்குத் தெரிவித்தேன்," என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

கம்பளி மெருகிடும் தொழிற்சாலை

வடஆற்காடு மாவட்டத்தில் துவங்கப்படும்

சென்னை, மார்ச் 20—

வடஆற்காடு மாவட்டம் விண்ணமங்கலத்தில் கம்பளி மெருகிடும் நிலையம் ஒன்று வெகு விரைவிலேயே வேலையைத் துவங்கும் என்றும், இதற்காகும் செலவை மத்திய சர்க்காரும், சென்னை, மைசூர் மாநில சர்க்கார்களும் சமமாகப் பங்கேற்றுக் கொள்வார்களெனவும் கூறப்படுகிறது.

இந்நிலையத்திற்கென ஏற்கனவே ரூ. 11,30,000 அனுமதிக்கப்பட்டுள்ளது. இயந்திரங்களுக்கென ரூ. 59,00,000-மும், நடை முதல் மூலதனமாக ரூ. 30,00,000-மும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தின் நிர்வாகம் சென்னை சர்க்காரின்கீழ் இருந்து வருமாம்.

'ஆட்டோ ரிக்ஷா!'

மொத்த மைல் அளவை மட்டுமின்றி ஒவ்வொரு பிரயாணத்தின் போதும் ஆகும் மைல்களையும் கணக்கிட்டுத் தெரிவிக்கும் 'ஸ்பீடா மீட்டர்'களை, 'ஆட்டோ ரிக்ஷா'க்களில் பொருத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாக சென்னை மேல்சபையில் போக்கு - வரத்து மந்திரி பரமேஸ்வரன் கூறியிருக்கிறார்.

'ஆச்சாரி'யை விடமாட்டாராம்!

புதுடில்லி, மார்ச் 20—

மத்திய சர்க்கார் வர்த்தக, கைத்தொழில் அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், தமது பெயரிலுள்ள 'ஆச்சாரி' என்ற விகுதியை எடுத்துவிட்டு,'கிருஷ்ணன்' அல்லது 'கிருஷ்ணா' என்று மாற்றிக் கொள்ளப் போவதாகப் பத்திரிகைகளில் வெளியான செய்தியை மறுத்து விட்டிருக்கிறார்.

தாம் 'தமாஷா'கக் கூறினதை உண்மை என்று நினைத்துக் கொண்டு இவ்வாறு செய்தி தரப்பட்டிருக்கிறது என்று அவர் அதுபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

மகாபலிபுரத்தில் வசதிப் பெருக்கம்

மகாபலிபுரத்தில், ரூ. 1,90,000 செலவில், பிரயாணிகள் தங்குமிடமொன்று அடுத்த நிதி ஆண்டில் கட்டப்படுமென்றும், இந்தச் செலவை மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் ஏற்றுக்கொள்ளுமென்றும் தெரிகிறது.

மத்திய சர்க்கார் தனது பங்காக இதற்கு ஒரு லட்சம் ரூபாய் அளிக்குமாம்.

மகாபலிபுரத்திற்கு வருகை தருவோருக்கும், அயல் நாட்டு உல்லாசப் பிரயாணிகளுக்குமென தங்கும் வசதியும், உணவு வசதிகளும் தருவதே இதன் நோக்கம் என்று கூறப்படுகிறது.

கைத்தறி விழாவில் கழகக் கருத்து

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தறியுடன் ஆலைசன் போட்டி போடுவதைத் தடுக்க முடியாது;' என்று கூறிவிட்டார்!

"போட்டியைத் தவிர்க்க வேண்டும் என்று கூறியவர் ஆச்சாரியார்; அதைக் கூடாதென்று கூறுபவரும் ஒரு டி. டி. கிருஷ்ணமாச்சாரி — அவரும் தென்னாட்டுக்காரர்தான்.

"தீர்மானத்தை இந்த நாட்டில் உள்ள எல்லாக் கட்சியினரும் ஆதரித்தனர்; தலைவர் பி. டி. இராசன் போன்ற இந்த நாட்டை ஆண்டவர்கள் ஆதரித்தார்கள்; ஆட்சிபீடத்தில் அமர்ந்துள்ள காங்கிரசார் ஆதரித்தனர்; நாட்டை ஆளவே கூடாது என்று சபிக்கப்பட்டிருக்கிற என்போன்றவர்கள் ஆதரித்தார்கள்; — இப்படி எல்லோரும் ஒரு முகமாக ஏற்றுக் கொண்ட ஒரு தீர்மானத்தை மத்திய அரசாங்கம் புறக்கணித்துவிட்டது!

"எனவேதான், இந்தமாதிரி விழாக்களில் என்னைப் போன்றவர்களை அழைப்பதைக் காட்டிலும், மத்திய அரசாங்க மந்திரிகளை அழைத்துவந்து காட்டுங்கள்; இங்கே குவிந்துள்ள கைத்தறித் துணிகளின் உயர்ந்த தரத்தினையும், அவைகளை நெய்யும் கைத்தறியாளர்களின் கைத்திறனையும் அவர்களுக்குப் புலப்படுத்துங்கள்; அப்படியே அந்த மந்திரிகளை, கைத்தறியாளர் வதியும் குடிசைகளுக்கும் இட்டுச் சென்று, அங்கு அவர்கள் படும் துயரங்களையும் காணச் செய்யுங்கள்; அவர்களது பசி நீங்க, மந்திரிமார்களை, வழிவகை காணுமாறு கூறுங்கள் என்று நான் கூறுகிறேன்.

"இந்த விழாவிலே பேசிய மந்திரிகளின் கருத்துக்களை நான் கூர்ந்து கவனித்தேன்-கவனமாகப் பத்திரிகைகளில் படித்தேன்.

"இங்கு பேசிய மந்திரி சுப்பிரமணியம் அவர்கள், 'கைத்தறியாளருக்கு நிரந்தரமான பாதுகாப்புக் கிடைக்க, மத்திய அரசாங்கம்தான் வழிசெய்ய வேண்டும்; சில ரகத் துணிகள் நெய்வதை கைத்தறிக்கே ஒதுக்க வேண்டும்,' என்று கூறியிருக்கிறார்.

"'காய்ச்சல் விட்டால் கைகால் பிடிப்பு விடும்' என்பதுபோல, மத்திய அரசாங்கம் மனது வைத்தால் தான் கைத்தறி வாழும் என்கிறார் மந்திரி சுப்பிரமணியம்!

'காய்ச்சல் விட—செந்தூரமா, பஸ்பமா, பச்சிலையா, 'இஞ்செக்ஷ'னா, யுனானி முறையா, சித்த வைத்தியமா, ஹோமியோபதியா, நாட்டு முறையா, ஆங்கில வைத்தியமா—என்பதை வேறு அரசியல் மேடைகளில் நாம் பேசிக்கொள்ளலாம்; இப்போது, காய்ச்சல் விட்டால், கைகால் பிடிப்பு விடும் என்பதை மட்டும் கூறிக்கொள்வோம்.

"கைத்தறி நெசவாளர்கள் நெய்த அருமையான துணிகள் இங்கே, காட்சிக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த வண்ணத் துணிகள், கண்ணைக் கவரும் வகையில் ஒளி விளக்குகளுக்கு மத்தியில் இருக்கின்றன.

"ஆனால், அவைகளை நெய்த நெசவாளர், இருள் நிறைந்த குடிசைகளில் வாழ்கிறார்கள்.

"அவர்கள் வாழும் குடிசைகள் மட்டுமல்ல இருள் நிறைந்தது—அவர்களின் வாழ்வே இருள் நிறைந்துகிடக்கிறது

"இங்கு வைக்கப்பட்டுள்ள துணிகளை நாங்கள் பார்வையிட்டோம் தலைவர் பி டி. இராசன் அவர்கள் கூட, இவ்வளவு அருமையான துணிகளை நெய்யும் நெசவாளர்கள், இந்தக் காலத்தில் இன்னும் பட்டுப் போகாமல் இருப்பது கண்டு ஆச்சரியப்பட்டார்கள்.

"அத்தகைய கைத்திறனும், நுணுக்கமும் கொண்ட நெசவாளர்கள், பரிதாபத்துக்குரிய அவல நிலையில் இருக்கிறார்கள்.

"எங்களுக்கு இந்தத் துணிக் கடைகளை சுற்றிக்காட்டிக்கொண்டு வந்த சங்கத் தலைவர் நாச்சிமுத்து அவர்கள், ஒவ்வொரு ரக கைத்தறித் துணியையும் காட்டி, அதற்குச் சமமான ஆலைத் துணியின் பெயரையும் விளக்கிக் கூறினார். 'காஷ்மீர் சால்வையா?—திருச்செங்கோட்டு நெசவாளர் செய்த போர்வைகள் இதோ!' என்று, ஆலைத் துணிகளில் உள்ள ஒவ்வொரு ரகத் துணியையும் எங்களுக்குக் காண்பித்தார்கள்.

"கைத்தறிக்கு ஏற்பட்டுள்ள அவல நிலை, மிகப் பயங்கரமானதாகயிருந்தது. வரவேற்றுப் பேசிய நாச்சிமுத்து அவர்கள் குறிப்பிட்டார்கள், தி. மு. கழகம் கைத்தறித் துணிகளை தோளிலே தூக்கி விற்றது குறித்து.

"திருச்சியில், நானும் கழகத் தோழர்களும் துணிவிற்பனையில் ஈடுபட்டிருந்தபோது, நண்பர் உடுமலை நாராயணகவி அவர்கள் கைத்தறித் துணி விற்பனைக்காக இயற்றியிருந்த பாடல் ஒன்றை, ஒரு தோழர் பாடிக்கொண்டிருந்தார்; அப்போது அந்தப் பாடலில் சின்னாளப்பட்டி என்ற ஊரில் செய்யப்படும் துணி பற்றியும் ஒருவரி பாடப்பட்டது. அதைக் கேட்ட ஒருவர், கூட்டத்திலிருந்து ஓடிவந்து கீழேவிழுந்து கும்பிட்டுவிட்டு, 'நீங்கள் பாடி இருக்கிறீர்களே சின்னாளப்பட்டி நெசவு பற்றி—அந்த சின்னாளப்பட்டியைச் சேர்ந்த நெசவாளன்தானய்யா நான்; தலையில் இருப்பது 15 சேலைகள்—நான் செய்தவை; கடந்த 4 தினங்களாக, திருச்சியில் அலையாத தெருவில்லை; கூவாத குரலில்லை; ஒரு சேலையும் விற்கவில்லை. குடும்பமே பட்டினி,' என்று அழுதார். அந்தக் காட்சியைக் கண்டவர் எவரும் கண்ணீர் வடிக்காமலிருக்க முடியாது.

"அப்படி நெசவாளர்கள் துன்பப்படுகிற நிலைக்கு மாற்றந் தேடித் தராத எந்த ஒரு அரசாங்கமும், வெட்கத்தால் தலைகுனியாமலிருக்க முடியாது

"என் நெசவாளர்கள், கையேந்திப் பிச்சை எடுக்க வெட்கப்பட்டு, அட்டைகளில் தங்களின் அவல நிலையை எழுதி, தெருக்களில் போவோர் வருவோரிடம் காலணா அரையணாப் பெற்று வயிறு கழுவினார்களே, அந்தக் காட்சிகளை யாரும் மறந்திருக்க முடியாது

"அந்த நிலையை மாற்ற அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகளை நாமும் பாராட்டுகிறோம்—நன்றி செலுத்துகிறோம்.

"நெசவாளர்கள் அன்று போல் இன்று பிச்சை எடுக்காவிட்டாலும், ஓரளவு வாழ வழி ஏற்பட்டிருக்கிறதென்றாலும், இப்போது வரும் செய்திகள் நமக்கு அச்சமூட்டுகின்றன.

"ரூ. 2 கோடி பெறுமான துணிகள் தேக்கம் என்றால், என்ன பொருள்?—நெசவாளரின் கண்களில் நீர் தேங்குகிறது, என்பதுதானே அதன் அர்த்தம்.

"துணிகள் விற்பனையாகாது தேங்கினால், நெசவாளர் உற்பத்தி செய்ய முடியாது; உற்பத்தி செய்யாவிடின், கூலி கிடைக்காது; கூலி இன்றேல், சோறு இல்லை—வறுமை வாட்டும்—பசி, அவர்களை பிய்த்துப் பிடுங்கும். எனவே அந்த நிலை அவர்களுக்கு வரவிடாது பார்த்துக் கொள்ளவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். வாயளவில் அனுதாபங் காட்டுவதுடன் அரசாங்கத்தின் கடமை முடிந்துவிடாது; விடக்கூடாது.

"கைத்தறியாளர் மீது அனுதாபங்கொண்ட மக்களுக்கு எந்த நேரத்திலும் துணி வாங்கும் சக்தி இல்லை. நாட்டுப் பொருளாதாரம் அப்படி இருக்கிறது. எனவே புதுத் துணி வாங்கப்படும் நாளாகிய பொங்கல் நாளையொட்டி, இந்த கைத்தறி வார விழா கொண்டாடப்பட்டால், ஏராளமான கைத்தறி விற்பனையாவதற்கு மார்க்கமுண்டு. சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையாயினும், அகில இந்தியாவிலும் இல்லாவிடினும், இந்த பொங்கல் நாளில் விழாக் கொண்டாடப்பட்டால், கைத்தறி விற்பனையில் கணிசமான முன்னேற்றமிருக்க முடியும் என்று கருதுகிறேன்.

"பொது மக்கள் மட்டுமே ஆர்வம் கொண்டவர்களாயும் ஆதரவு காட்டுபவர்களாயுமிருந்தால் போதும் என்று அரசாங்கம் கருதி விடக்கூடாது.

"மத்திய அரசாங்கம், இராணுவத்திற்கென்று மட்டும் ஆண்டுதோறும் இருநூறு கோடி ரூபாய் செலவிடுகிறார்கள். அந்த இராணுவத்தினருக்குத் தரப்படும் ஆடைகளை, கைத்தறி ஆடைகளாகவே மத்திய அரசாங்கம் வாங்கவேண்டும். அப்படிச் செய்தால், ஒரு கோடி ரூபாய் பெறுமான துணி என்ன—பல கோடி ரூபாய் பெறுமான துணி கூட தேங்காது விற்பனையாகுமே; ஆலைத் துணிகளைப் போன்றே நல்ல தரமும் உழைப்பும் கொண்டவைதானே கைத்தறித் துணிகளும்.

"அதைப் போலவே மாநில அரசாங்கமும் போலீஸ் இலாகாவுக்கான துணிகளை கைத்தறியாகவே வாங்கலாம். அவர்களுக்குத் தேவையான முறுக்கும் மிடுக்கும் கொண்ட ரகங்களும் கைத்தறியில் நெய்யத்தான் படுகின்றன. இந்த எனது யோசனைகளை, கைத்தறி வார விழாக் கூட்டத்தில் கூறுவது பொருத்தமென்றே கருதுகிறேன்.

"இப்படி, உருப்படியான துணி விற்பனைக்கு வழியும், தொழிலுக்கு நிரந்தரமான பாதுகாப்பும் தர அரசாங்கம் முன்வரவேண்டும்.

"அதை விடுத்து, கைத்தறியும் வாழ வேண்டும்; ஆலைத் துணியும் போட்டியிடும் என்றால் எப்படி?

"புலிபோல இருக்கும் ஆலையும், பசுபோல இருக்கும் கைத்தறியும், பாதுகாப்பின்றி எப்படி ஒன்றாக வாழ முடியும்?

"சர்க்கஸ் கம்பெனியில் வேண்டுமானால், புலியையும், பசுவையும் ஒன்றாக சிறிதுநேரம் வாழச்செய்ய முடியும் அதைப் போலவே சர்க்காரும் சர்க்கஸ்காரரைப்போல ஆலையையும் கைத்தறியையும் வாழவிட நினைக்கிறார்கள்.

"சில நேரங்களில் வரும் செய்தி, புலி சர்க்கஸ்காரன் கையிலிருக்கும் சாட்டையையும், சர்க்கஸ்காரரையுமேகூட மீறி, பசுவின் மீது பாய்வதாகக் கூறுகின்றன. சில நேரங்களில் சர்க்கஸ்காரனுக்குக்கூட புலியால் ஆபத்து என்பதைப் போல இந்த அரசாங்கமும் இந்தக் கைத்தறிப் பிரச்சினையில் செய்து வரும் சர்க்கஸ் வேலையில் ஆபத்துக்காளாகக்கூடாது என்று ஆசைப் படுகிறேன்."

ஆந்திரம் கைவிடுகிறது! சென்னை கூட்டுகிறது!

கதர் உற்பத்தி இரட்டிப்பாக்கப்படுமாம்!

சென்னை அரசாங்கத்தின் முதலைப் போக்கு!

அடுத்த ஆண்டில் கதர் உற்பத்தியை இரட்டிப்பாக்கும் முயற்சியை சென்னை அரசாங்கம் மேற்கொண்டு இருக்கிறது.

பல உற்பத்தி நிலையங்கள்மூலம், ரூ. 25 லட்சம் மதிப்புள்ள கதர் ஆடையை சொந்தப்பொறுப்பில் சென்னை அரசாங்கம் தற்சமயம் உற்பத்தி செய்து வருகிறது. ஏப்ரல் முதல் நடைமுறைக்குக் கொண்டுவர இருக்கும் உற்பத்தி ஏற்பாட்டின்படி ரூ. 50 இலட்சம் மதிப்புக்குக் கதர் உற்பத்தி இரட்டிப்பாக்கப் படுமாம்.

அகில இந்திய கதர் உற்பத்திச் சங்கமும், தனி நபர்களும் உற்பத்திச் செய்துவரும் கதர் ஆடைக்குப் புறம்பானதாம், சென்னை அரசாங்க கதர் உற்பத்தி!

தம் இலாகாக்களின் உபயோகத்திற்காக இந்தியப் பேரரசு கோரும் பெருகிவரும் தேவையை நிரப்பும் நோக்கத்துடன்தான், கதர் உற்பத்தியை இரட்டிப்பாக்குவதற்கு சென்னை அரசாங்கம் முன்வந்திருக்கிறது என நம்பப்படுகிறது.

இது ஒரு பக்கம் இருக்க, ஆடவர்களுக்கான மெல்லிய சட்டைத் துணிகளையும், அரை வேட்டிகளையும் உற்பத்தி செய்யவும் அரசாங்கம் முன்வந்திருக்கிறதாம். ஏற்கெனவே, இவ்வகையில் ஆந்திரா தனிச் சிறப்பு பெற்றிருந்ததாம்.

அரசாங்கக் கணக்குப்படி, அரசாங்கப் பொறுப்பில் நடைபெறும் கதர் உற்பத்தியில் 54,000 குடும்பம் ஈடுபட்டிருப்பதாயும், அவைகளில் 20,000 குடும்பம் முழு நேரமும் மீதமுள்ளவை குறைந்த நேரமும் தொழில் செய்துவருவதாகத் தெரியவருகிறது. இரட்டிப்பு உற்பத்தி ஏற்பாட்டினால், ஒரு இலட்சம் குடும்பம் கதர்த் தொழிலில் ஈடுபடக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி தொழிலில் ஈடுபட்டு வரும் ஒவ்வொருவருக்கும் தினசரி 6 அணா முதல் 1 ரூபாய் வரையில் ஊதியம் கிடைக்கக்கூடுமென நம்பப்படுகிறது.

[குறிப்பு:— ஆந்திர மாநில கதர் அபிவிருத்தி இலாகாவை வரும் ஏப்ரல் முதல் மூடிவிடுவது என்றும், அந்த இலாகாவின் வேலைகளை அகில இந்திய கதர், கைத்தொழில் போர்டு மேற்கொள்ளுவது என்றும் ஏற்பாடாகியுள்ளது பற்றி செய்தி வெளிவந்துள்ளது. விவரம் இரண்டாம் பக்கம் காண்க.]

★

"புது வாழ்வு"

சென்னையில் நடைபெற்றுவரும் கைத்தறி வார விழாவினை ஒட்டி, சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் 23—3—55 இரவு 7-30 மணி அளவில் "புது வாழ்வு" என்ற ஒரு நாடகம் நடிக்கப்பட்டது.

கைத்தறி நெசவாளர் இரண்டாண்டுக்கு முன் பட்ட துயரம், பின் அவர்களுக்கு தரப்பட்ட நிவாரணம், கூட்டுறவு முறையில் கைத்தறி உற்பத்தி—விற்பனை இவற்றின் அவசியம் ஆகிய கருத்துக்களை உள்ளடக்கிய அந்த 'புது வாழ்வு' நாடகம், கோ ஆப் டெக்ஸ் நாடக மன்றத்தாரால் நடிக்கப்பட்டது. ஒரு நெசவாளர் குடும்பத்தை களமாகக் கொண்டு, காட்சிகள் பின்னப்பட்டிருந்தன. கதைக்கு வேண்டாத சம்பவங்கள் சில இடம்பெற்றிருந்தாலும் கூட, நாடகத்தில் பங்கு பெற்ற நடிக, நடிகையர் திறம்பட நடித்து, கைத்தறி நெசவாளருக்கு, கைத்தறித் துணிகளையே அணிவதின் மூலம் மக்கள் ஆதரவு தரவேண்டும் என்று எடுத்துக்காட்ட பயன்படுவதாக அமைந்திருந்தது. (ந. நி)

ஐந்தாண்டுத் திட்ட கண்டனக்கூட்டங்கள்

★

சந்தைப்புதுப்பாளையம்

பிள்ளையார் கோவில் தெரு, அழகிரி மேடையில்

24—3—55 மாலை 6½ மணிக்கு

பேசுவோர்:

என். வி. நடராசன்

கே. சுப்பிரமணியம்

ப. உ. சண்முகம்

★

குடந்தை

24—12—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: கே. கே. நீலமேகம்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

சோ. நாராயணசாமி

★

தர்மபுரி

தீர்த்தகிரியார் மைதானத்தில்

25—3—55 மாலை 6 மணிக்கு

பேசுபவர்:

இரா. நெடுஞ்செழியன்

திருமணங்கள்

25—3—55 மாலை 4 மணிக்கு, தர்மபுரி, குமாரசாமிபேட்டை மணமகள் இல்லத்தில், தோழர் சு. திபாகராசன்—தோழியர் சரோசா திருமணம், தோழர் க. குட்டியப்பன் தலைமையில் நடைபெறும். தோழர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றுவார்.

* * *

25—3—55 காலை 8 மணிக்கு, பாபநாசம், வடக்குத் தெருவில், தோழர் மகாலி—தோழியர் அஞ்சலை, தோழர் கணேசன்—தோழியர் இலட்சுமி திருமணங்கள், தோழர் க. அப்பாதுரை தலைமையில் நடைபெறும்.

* * *

25—3—55 காலை 8½ மணிக்கு, காஞ்சிபுரம் தாலுகா, பரந்தூர் கிராமத்தில், தோழர் கன்னியப்பன்—தோழியர் இராணி திருமணம், தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

சோவியத் ரஷ்ய கலாச்சார இலாகாவின் அமைச்சராக இருக்கும் அலெக்சாண்டிரோவ், மந்திரி சபையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என்று தெரியவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிட்டுப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.

கலை விழா-
காஞ்சியில் 30-3-55 முதல் 5-4-55 வரை